
# உடல்நலம் பேணல்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

# கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

- பெயர் : விநாயகம்
- பெற்றோர் : சிவதாணுப்பிள்ளை

  ஆதிலட்சுமி
- மனைவி : உமையம்மை
- பட்டம் : சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் கவிமணி
- பிறப்பு : 27.7.1876
- இறப்பு : 26.9.1954



# உடல்நலம் பேணல்

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொரும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவாயேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே!



# காலை மாலை உலா

காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப்போவானே!


ஆளும் அரசன்ஆனாலும்
ஆகும் வேலை செய்வானேல்
நாளும் நாளும் பண்டிதர்கை
நாடி பார்க்க வேண்டாமே!



# கூழையே நீ குடி

கூழையே நீ குடித்தாலும்
குளித்த பிறகு குடி அப்பா
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா!

மட்டுக் குணவை உண்ணாமல்
வாரி வாரித் தின்பாயேல்
திட்டு முட்டுப் பட்டிடுவாய் !
தினமும் பாயில் விழுந்திடுவாய் !



# தூய காற்று

தூய காற்றும் நன்நீரும்
கண்ட பசித்தபின் உணவும்
நோயை ஓட்டிவிடும் அப்பா!

அருமை உடலின் நலமெல்லாம்
அடையும் வழிகள் அறிவாயே
வருமுன்நோயைக்காப்பாயே
வையம் புகழ வாழ்வாயே!

